**R196 (page 1)** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# ஆவியுலகத் தொடர்பு பற்றின கோட்பாடு
# SPIRITUALISM

வேதாகமச் சொல் தொகுதியினை/concordance எடுத்துக்கொண்டு, அதில் சூனியக்காரர், சூனியக்காரிகள், குறிசொல்லும் ஆவியையுடைய அஞ்சனம் பார்க்கிறவர்கள், மனுக்குலத்தோடு தொடர்புகொள்ளத்தக்கதாக பிசாசுகள் பயன்படுத்தும் தொடர்பாளர்கள்/அநனரைஅள ஆகியவைகளுக்கு எதிராக, தேவன் எவ்வளவு காரியங்களைப் பேசியிருக்கின்றார் என்பதைப் பாருங்கள். "குறிசொல்லும் இந்த ஆவியின்" தொடர்பாளர்கள், தாங்கள் மரித்தவர்களோடு தொடர்புகொள்வதாகவும், அவர்களிடமிருந்து தங்கள் தகவல்களைப் பெற்றிருப்பதாகவும் கூறிக்கொள்கின்றனர். இப்படிச் சொல்வதினால் இவர்கள், மரித்தவர்களினால் எந்தத் தகவலையும் அளிக்க முடியாது என்று நமக்கு உறுதியளிக்கும் தேவனுடைய வார்த்தைகளின் தெளிவான அறிக்கைக்கு முரண்படுகின்றனர். (யோபு 14:10-21; பிரசங்கி 9:10)

ஆனால் இது, ஏதேனில் வைத்து ஏவாளிடம் சாத்தான் கூறிய பொய்யை, இன்னும் தொடருவதற்குரிய சாத்தானின் மற்றுமொரு வழிமுறை மாத்திரமேயாகும். ஸஅவன் ஆதிமுதல் பொய்யனாய் இருந்தான் என்று இயேசு கூறியுள்ளார். மனிதன் கீழ்ப்படியாமல்போனால், அவன் மரித்துப்போவான் என்று தேவன் கூறியிருந்தார்; ஆனால் சாத்தானோ இந்த வார்த்தைகளுக்கு முரணாகப் பேசினார்; மனிதன் சுபாவத்தின்படி அழிக்கமுடியாதவனாவான் மற்றும் அவனால் மரிக்க முடியாது என்றும், தேவன் பொய்யுரைத்துள்ளார் என்றும் சாத்தான் கூறினார். அதுமுதற்கொண்டு, "நீங்கள் சாகவே சாவதில்லை" எனும் வார்த்தைகளை விடாப்பிடியாக நிலைநிறுத்த நாடி வந்தார். ஆவியுலகத் தொடர்பாளர்கள் (mediums) வாயிலாகத் தங்களிடம் பேசினது "பிசாசுகளின் ஆவிகளே" என்று ஜனங்கள் ஒருவேளை புரிந்துகொள்வார்கள் என்றால், ஜனங்கள் தவிர்த்து வெறுத்துவிடுவார்கள் என்பதைச் சாத்தான் நன்கு அறிந்திருந்தார்; ஆகையால் தகவல்களைக் கொடுப்பது மரித்தவர்களே ஆவார்கள் என்று காட்டிக்கொள்கின்றான்; ஸஇந்த மரித்துப்போனவர்கள், மரித்தவர்களாய் இராமல், முன்பில்லாதளவுக்கு ஜீவனுள்ளவர்களாய் இருக்கின்றார்களென (சாத்தான்) காண்பித்துக் கொள்கின்றான்ஹ.

இதற்கான ஓர் உதாரணம் 1 சாமுயேல் 28-ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இஸ்ரயேலின் இராஜாவாகிய சவுல் பொல்லாதவராகிப் போனார்; தேவன் தீர்க்கத்தரிசிகள் மூலமாகச் சவுலோடு எந்தத் தொடர்பு பரிமாற்றங்களையும் வைத்துக்கொள்ளவில்லை. சவுல் பெலிஸ்தருக்கு எதிராக ஒரு யுத்தம் மேற்கொண்டார்; மேலும் பெரியதொரு யுத்தத்தை அவர் பண்ண வேண்டியவராகவும் காணப்பட்டார். அவர் ஆலோசனை பெறவும், முடிவு என்னவாக இருக்குமென அறியவும் விரும்பினார். தேவன் அவருக்குப் பதில்தர மறுத்ததினால், நிராகரிக்கப்பட்ட மற்றும் தடைவிதிக்கப்பட்ட வகுப்பாரில் ஒரு வகுப்பாராகிய ஆவியுலகத் தொடர்பாளரும், குறிசொல்லும் ஆவியை உடையவளுமான எந்தோரின் அஞ்சனம்பார்க்கும் ஸ்திரீயின் உதவியினை நாடினார்.

இந்தச் சம்பவத்தை அனைவரும் அறிந்திருப்பீர்கள் (1 சாமுயேல் 28:3-20); அந்த அஞ்சனக்காரி, விசாரிக்க வந்தவர் யார் என்று தெரியாததுபோன்று காட்டிக் கொள்கின்றாள். சவுலின் வாஞ்சையை அறிந்துகொள்கின்றாள். சாமுயேலுடைய உருவ

தோற்றத்தின் விவரங்களைக் கொடுக்கின்றாள். முழுச்சம்பவத்தையும் அறிவீர்கள். பின்னர்ச் சவுல் யுத்தத்தில் தோற்றுப்போகின்றார்; அவரும், அவரது குமாரரும் மரித்துப்போய்விடுகின்றனர். அஞ்சனக்காரி மூலம் முன்னுரைக்கப்பட்ட விஷயங்கள் நடந்தது என்பதினால், இது சாமுயேல்தான் தகவல் கொடுத்திருக்கின்றார் என்பதற்கு நிரூபணமாக இருக்கின்றது என்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்தத் தகவல்களையெல்லாம் சாத்தானால் முன்னறிவிக்க முடியும்; ஒருவேளை சாமுயேல் உயிரோடு இருந்திருந்தால் அவராலும், இந்தத் தகவல்களையெல்லாம் முன்னறிவித்திருக்க முடியும். இப்படிச் சாத்தானால் முன்னறிவிக்க முடியும் என்று கூறுவதற்குரிய காரணம், சாத்தான் தீர்க்கத்தரிசியாகக் காணப்பட்டார் என்பதினால் இல்லை; அல்லது தேவன் வரவிருக்கின்ற காரியங்களைச் சாத்தானுக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்பதினாலும் இல்லை; மாறாக சாத்தான் தேவனுடைய வார்த்தைகளின் மாணாக்கன் ஆவார்; மேலும் சாத்தான் அந்த வார்த்தைகளின் விசுவாசியும் ஆவார். “பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன” (யாக்கோபு 2:19). சவுலின் தோல்வி மற்றும் தாவீது அரியணைக்கு வருவது குறித்துத் தீர்க்கத்தரிசியினால் முன்னுரைக்கப்பட்டுள்ளது; இதைச் சவுலும், சாத்தானும் அறிவார்கள்; மேலும் தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைகளும் உண்மையானவைகள் என்று சாத்தான் கற்றுணர்ந்திருக்கின்றார்.

“மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்” எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளையும் நாம் மறந்து விடக்கூடாது (எபிரெயர் 2:14). சாத்தான் மரணதண்டனையைச் செயல்படுத்து-கின்றவராகவும், தண்டனையைச் செயல்படுத்துவதற்குத் தேவனிடமிருந்து அனுமதி பெற வேண்டியவராகவும் இருப்பதினால் (யோபு 1:12), அடுத்த நாளின் யுத்தத்தில் சவுல் மற்றும் அவரது குமாரர்களின் மற்றும் மற்ற அநேகரின் ஜீவன் விஷயத்தில், தான் அதிகாரம் உடையவராய் இருப்பார் என்று சாத்தான் அறிந்திருப்பார் என்பதில் விநோதம் ஏதேனும் உள்ளதா? இல்லை; இது நியாயமான அனுமானமேயாகும். தேவன் மரணதண்டனைக்கு ஏதுவானதெனக் கண்டித்துள்ள ஒரு வழிமுறையினை மற்றும் பொல்லாப்பு என்று தீர்த்துள்ள ஒரு வழிவகையினை, தேவன் (அல்லது சாமுயேல்) பயன்படுத்துவார் அல்லது அங்கீகரிப்பார் என்று நாம் ஒரு கணம்கூட நிச்சயமாய் எண்ணக்கூடாது. (1 நாளாகமம் 10:13-ஆம் வசனத்தை வாசிக்கவும்)

## தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகள்

சங்கீதம் 89 - **NLT (New Living Translation)**

3 என்னால் தெரிந்துகொள்ளப்பட்டவனோடே உடன்படிக்கைபண்ணி,
என் தாசனாகிய தாவீதை நோக்கி:

20 என் தாசனாகிய தாவீதைக்கண்டு பிடித்தேன்;
என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம்பண்ணினேன்.

21 என் கை அவனோடே உறுதியாயிருக்கும்;
என் புயம் அவனைப் பலப்படுத்தும்.

27 நான் அவனை எனக்கு முதற்பேறானவனும்,
பூமியின் இராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன்.

28 என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன்;
என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும்.

33 ஆனாலும் என் கிருபையை அவனை விட்டு விலக்காமலும்,
என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன்.

34 என் உடன்படிக்கையை மீறாமலும்,
என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்.

35 ஒருவிசை என் பரிசுத்தத்தின்பேரில் ஆணையிட்டேன்,
தாவீதுக்கு நான் பொய்சொல்லேன்.

36 அவன் சந்ததி என்றென்றைக்கும் இருக்கும்;
அவன் சிங்காசனம் சூரியனைப்போல எனக்கு முன்பாக நிலைநிற்கும்.

-------------------------